2019 ஜூலை 5] [திரு. எம். சி. சம்பத்]

கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக ஆய்வு செய்து, எத்தனை ஏக்கர் கரும்பு பாதிக்கப்பட்டுள்ளது, என்ன நிலைப்பாடு என்று மூங்கில்துறைப்பட்டு, கள்ளக்குறிச்சி 1, கள்ளக்குறிச்சி 2 பகுதிகளில் இருக்கின்ற ஒட்டுமொத்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய கரும்பு காய்கின்ற நிலையை ஆய்வு செய்வதற்கு ஆய்வு committee *அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வு* committee *தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. எந்த விவசாயிக்கு எத்தனை ஏக்கர் கரும்பு பாதிக்கப்பட்டுள்ளது, கரும்பு காய்ந்திருக்கின்றது என்று ஆய்வு* committee *ஒரு வார காலத்திற்குள்ளாக அந்த நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கின்றோம். அந்த உத்தரவின் அடிப்படையில், உடனடியாக மூங்கில்துறைப்பட்டு, கள்ளக்குறிச்சி 1, கள்ளக்குறிச்சி 2, கள்ளக்குறிச்சி 3 பகுதிகளில் இருக்கின்ற 3 ஆலைகளில் ஓர் ஆலையை இயக்கி, நிச்சயமாக அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய நலனைக் காப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசு மிக கவனத்தில் எடுத்துக் கொண்டு, உடனடியாக அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புகளையெல்லாம் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி,* insurance *செய்திருக்கிறார்கள். ஆனால்,* insurance *செய்தவர்களின் நிலங்களை அதிகாரிகள் வந்து பார்க்காமல், கரும்புக்கு* insurance *தொகை கிடைக்காமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயத் துறையின் சார்பாக அந்தக் காய்ந்த கரும்புகளைக் கணக்கெடுத்து* insurance *பணம் விவசாயிகளுக்கு விரைந்து கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)*

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நீங்கள் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் ஒன்றும் (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்களே! அது*

என்ன நியாயம்? (குறுக்கீடு) நீங்களெல்லாம் பேசுகிறீர்கள். நான் பேசினால் கேட்க மாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போது மணி 12–30 ஆகிவிட்டது. எனக்கு இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. அடுத்தது, மாண்புமிகு முதலமைச்சருடைய விதி 110–ன்கீழான அறிவிப்பு இருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, தகவல் கோரல் என்கின்ற முறையிலே (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டவை அனைத்தையும் நான் ஒத்துக்கொண்டேன். (குறுக்கீடு) மூன்று கேட்டீர்கள். மூன்றையும் நான் ஒத்துக்கொண்டு எடுத்துக்கொண்டேன். எல்லோரும் கேள்வி கேட்க வேண்டுமென்றால் எப்படி? நீங்கள் கேட்கிறீர்கள், இதோ பாருங்கள், அவர் எழுந்து நிற்கின்றார். நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) இல்லை, இது முறையல்ல. சபையை நடத்துவதற்கு நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும். இப்படி பேசிக் கொண்டிருந்தால் முறையல்ல, விடுங்கள். (குறுக்கீடு)

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் நவீன அரிசி ஆலைகள் நிறுவுதல், துருப்பிடிக்காத மேற்கூரை, சூரிய மின்சக்தியுடன் குளிர்சாதனக் கிடங்கு அமைத்தல் உள்ளிட்ட உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை உடனடியாக அரவை செய்திட ஏதுவாக, கூடுதலாக நவீன அரிசி ஆலைகளை நிறுவிட வேண்டியது அவசியமாகிறது. எனவே, உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய நவீன இயந்திரங்களைக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன்கூடிய நவீன அரிசி ஆலை சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*